# அக்டோபர் – 31 – புதன்

## புனித அல்போன்ஸ் ரொட்ரிக்கஸ்

### உமது அரசு எல்லாக் காலங்களிலுமுள்ள அரசு: திபா. 145:13

**முதல் வாசகம்:ஏபேசியர் 6 : 1 – 9**

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது.”உன் தந்தையையும் தாயையும் மதித்துநட” என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை.”இதனால் நீ நலம் பெறுவாய் மண்ணுலகில் நீடூழி வாழ்வாய்” என்பதே அவ்வாக்குறுதி. தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவுபுகட்டி வளர்த்துவாருங்கள். அடிமைகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதுபோல் இவ்வுலகில் உங்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்களுக்கு அச்சத்தோடும் நடுக்கத்தோடும், முழுமனத்தோடும் கீழ்ப்படியுங்கள். மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு, வேலைசெய்வதாகக் காட்டிக் கொள்பவர்களாயிராமல் கிறிஸ்துவின் பணியாளராய்க் கடவுளின் திருவுளத்தை உளமார நிறைவேற்றுங்கள். மனிதருக்காக அன்றிக் கடவுளுக்காகவே செய்வதுபோல நல்மனத்தோடு வேலை செய்யுங்கள். அடிமையாயினும் உரிமைக் குடிமகனாயினும், நன்மை செய்யும் ஒவ்வொருவரும் ஆண்டவரிடமிருந்து நன்மையே பெறுவர். இது உங்களுக்குத் தெரியும் அன்றோ!தலைவர்களே, நீங்களும் உங்கள் அடிமைகளிடம் அவ்வாறே நடந்து கொள்ளுங்கள். அவர்களை அச்சுறுத்துவதை விட்டுவிடுங்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் ஒரே தலைவர் விண்ணுலகில் உண்டு என்பதையும் அவர் ஆள்பார்த்துச் செயல்படுவதில்லை என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் வாக்குகள் அனைத்திலும் உண்மையானவர்.

**நற்செய்தி: லூக்கா 13 : 22 – 30**

அக்காலத்தில் இயேசு நகர்கள், ஊர்கள் தோறும் கற்பித்துக்கொண்டே எருசலேம் நோக்கிப் பயணம் செய்தார். அப்பொழுது ஒருவர் அவரிடம், “ஆண்டவரே, மீட்புப்பெறுவோர் சிலர் மட்டும்தானா?“ என்றுகேட்டார். அதற்கு அவர் அவர்களிடம் கூறியது : “இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள். ஏனெனில் பலர் உள்ளேசெல்ல முயன்றும் இயலாமற்போகும். வீட்டு உரிமையாளரே, எழுந்து கதவைத் திறந்துவிடும்“ என்று கேட்பீர்கள். அவரோ, ‘‘நீங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என எனக்குத்தெரியாது“ எனப் பதில் கூறுவார். அப்பொழுது நீங்கள், “நாங்கள் உம்மோடு உணவு உண்டோம், குடித்தோம். நீர் எங்கள் வீதிகளில் கற்பித்தீரே“ என்று சொல்வீர்கள். ஆனாலும் அவர், “நீங்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது. தீங்கு செய்வோரே, அனைவரும் என்னைவிட்டு அகன்று போங்கள்“ என உங்களிடம் சொல்வார். ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் இறைவாக்கினர் யாவரும் இறையாட்சிக்கு உட்பட்டிருப்பதையும் நீங்கள் புறம்பே தள்ளப்பட்டிருப்பதையும் பார்க்கும்போது அழுது அங்கலாய்ப்பீர்கள்.இறையாட்சியின்போது கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலுமிருந்து மக்கள் வந்து பந்தியில் அமர்வார்கள். ஆம், கடைசியானோர் முதன்மையாவர் முதன்மையானோர் கடைசியாவர்“ என்றார்.

**தியானம்:** மனித வாழ்வில் மன வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பு. தொடரும் மனவேற்றுமை விவாத மேடையாய் வருவதுமுண்டு. கோபமேடையாகி, பகையாகி, பழிவாங்கலாகி, தீராப்பகை போராய் முடியும் நிலைக்கு தள்ளப்படுவதுமுண்டு. இரண்டு மூடிய கைகள் கைகுலுக்கி மகிழமுடியாது, மூடிய இரு மனங்களும் வாழ்வின் இனிய பங்களிப்பில் திழைக்கமுடியாது. பிள்ளைகளோ பெற்றோர்களோ, தலைவர்களோ, அடிமைகளோ எவர் ஒருவர் தன்னை நேசிக்க மறக்கிறார்களோ அவர் தன்னைப் படைத்த இறைவனை மறுதலிக்கிறார். மனிதர்களுக்கு உகந்தவர்களாயிருக்க மாறுவேலை செய்வதாகக் காட்டிக்கொள்பவர்களாயிராமல் கிறிஸ்துவின் பணியாளராய் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவராய் இருக்கும்படி இன்றைய முதல் வாசகம் அழைத்து நிற்கின்றது. பிரச்சனைகள் இலாத வாழ்க்கையில்லை அவையிருந்தால்தான் வாழ்க்கையில் படிப்பினையிருக்கும். சுவையிருக்கும் வாழ்க்கை ஒரு விளையாட்டு. எம் கையால் வீசி எறியும் பந்துமாலையில் திரும்பி வந்து எம் முகத்தை காயப்படுத்தும். ஆண்டவருடைய நாள் திருடனைப் போல் வரும். எப்போது வரும் என்று எவருக்கும் தெரியாது. துன்பமும், துயரமும் பிறரிடமிருந்து வருவதில்லை. நமக்கு நாமே வருவித்துக் கொள்வது தான். இடுக்கமானவாயில் வழியே நாம் நுழைய வேண்டுமென்றால் எம்மைப் போல் மற்றவரையும் அன்பு செய்ய வேண்டும். என்னிடம் உள்ளவற்றில் சிலவற்றையாவது இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவேண்டும். நாம் பிறக்கின்றோம், வாழ்கின்றோம். சாதிக்கின்றோம். நமக்குப் பின்னால் வரும் சமுதாயத்திற்கு எதைவிட்டுச் செல்கின்றோம் என்பதை சிந்திப்போம்.